

Tamilisch

# ஆரம்பப் பாடசாலையில் இருந்து செக்குண்டார் வகுப்பிற்கு பெற்றோருக்கான தகவல்கள்

# ஆரம்பப் பாடசாலையில் இருந்து செக்குண்டார் வகுப்பிற்கு

**ஆரம்பப் பாடசாலையின் 6ம் வகுப்பிற்குப் பின் பிள்ளைகளுக்கு அவர்களினுடைய பாடசாலை வாழ்க்கைப் பாதையில் பல வழிகள் இருக்கின்றன. அவர்கள் ஒன்றில் தொடர்ந்து ஆரம்பப் பாடசாலைக்குப் போவார்கள் அல்லது அவர்கள் ஆரம்பப் பாடசாலையை விட்டுவிட்டு கிம்நாசியத்திற்கு மாறுவார்கள்.**



## ஆரம்பப் பாடசாலையின் செக்குண்டார் வகுப்பு

**6 ம் வகுப்பிற்குப் பின் ஆரம்பப் பாடசாலையின் செக்குண்டார் வகுப்பு வித்தியாசமான மட்டங்களுள்ள பிரிவுகளாக பிரிக்கப்படும். நகரத்திலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் சபை இரண்டு அல்லது மூன்று பிரிவுகளை அமைக்கலாம், அதாவது பிரிவுகள் A யும் B யும் அல்லது பிரிவுகள் A, B அதோடு C. பிரிவு A அதிக கஷ்டமான பிரிவு.**

**ஒரு பிள்ளை எந்தப் பிரிவுக்கப் போவதென்பதைப் பற்றிய தீர்மானத்தை ஆசிரியரும் பெற்றோரும் சேர்ந்து முடிவெடுப்பார்கள். அதற்கு உடன்பாடில்லாவிடில் செக்குண்டார் வகுப்பிற்கு பொறுப்பாக உள்ள பாடசாலைப் பொறுப்பாளர் இதைத் தீர்மானிப்பார்கள்.**

**ஒரு மொத்த மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும். இதில் ஒரு பிள்ளையின் படிப்பின் பெறுபேறுகள், அதன் வேலைசெய்யும் - அதோடு படிக்கும் முறை, அது மற்றவர்களுடன் பழகும் முறை அதோடு அதன் முன்னேற்றத்தின் நிலை போன்றவை உள்ளடங்கும்.**

**வெவ்வேறு பாடங்களில் பிள்ளைகளின் வித்தியாசமான படிக்கும் ஆற்றலுக்குத் தக்கதாக, நகரத்திலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் சபை கணக்கு, டொச், பிரெஞ்சு அதோடு ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு வித்தியாசமான மட்டங்களில் வகுப்புக்களை அமைக்கலாம் - வித்தியாசமான மட்டங்களுள்ள வகுப்பு I, II அதோடு III - மட்டம் I எதிர்பார்ப்புக்கள் நிறைந்தது. இப்படியான வித்தியாசமான மட்டங்களுள்ள வகுப்புக்களுக்குப் பிரிப்பது ஒரு பிள்ளை குறிப்பிட்ட பாடத்தில் பெற்ற மொத்த பெறுபேறுகளின் அடிப்படையில் நடைபெறும்.**

**ஒரு பிள்ளைக்கு படிப்பில் கிடைத்த பலனையும் முன்னேற்றத்தின் நிலையையும் பொறுத்து வருஷத்திற்கு இரண்டு தரம் (செக்குண்டார் வகுப்பின் முதலாவது வருடத்தில் வருடத்திற்கு மூன்று தரம்) பிரிவுகளையும் வித்தியாசமான மட்டங்களுக்கான வகுப்புக்களையும் மாற்ற முடியும், அந்தத் தீரமானத்தை மறுபடியும் ஆசிரியர்களும் பெற்றோரும் சோந்து எடுப்பார்கள், மேலும் அதில் உடன்பாடில்லாவிடில் பாடசாலை பொறுப்பாளர் இதை முடிவு செய்வார்கள்.**

**கட்டாய பள்ளிக்கூடக் காலம் முடிவடைந்த பின் எதிர்பார்ப்புகள் கூடிய வேலைக்கான பயிற்சிக்குப் போகலாம், அல்லது ஆரம்பப் பாடசாலையின் செக்குண்டார் வகுப்பிலிருந்து ஒரு நடுநிலைப் பாடசாலைக்கு (Mittelschule) மாறலாம், இதற்குத் தேவை அதிக கஷ்டமானதும் கூடிய எதிர்பார்ப்புகள் உள்ளதுமான பிரிவுக்கும் உயர் மட்டத்திற்கும் போக வேண்டும்.**

## மாற்றத்திற்கான நடவடிக்கையின் சாத்தியமான காலக்கிரம அட்டவணை

| நிலை | காலம் | செயல் (நடவடிக்கை) |
|---|---|---|
| 1 | ஆரம்பப் பாடசாலையின் 6ம் வகுப்பின் முதல் காலாண்டு | பாடசாலை பெற்றோருக்கு செக்குண்டார் வகுப்பின் ஒழுங்கமைப்பைப் பற்றியும் அதோடு வித்தியாசமான பாடசாலை முறையைப் பற்றியும் தெரிவிக்கும். அவர்கள் கிம்நாசியத்தைப் பற்றி தகவல்கள் கொடுக்கும் மாலைப்பொழுதில் தெரிவிப்பார்கள். |
| 2 | தை கடைசி வரையும் | வகுப்பாசிரியர் பெற்றோருடன் அவர்களினுடைய பிள்ளையின் எதிர்கால பாடசாலை வாழ்க்கைப் பாதையைப் பற்றி ஒரு பேச்சுவார்த்தை நடத்துவார். |
| 3 | பங்குனி நடுப்பகுதி வரையும் | பெற்றோருக்கு வகுப்பாசிரியரிடமிருந்து மாற்றம்-/பிரிப்பதைப் பற்றிய ஆலோசனை கிடைக்கும், அதோடு அதைப்பற்றி வகுப்பாசிரியருடன் சம்மந்தப்பட்ட பிள்ளையின் முன்னிலையில் ஒரு பேச்சுவார்த்தை நடாத்தலாம்.<br><br>அதற்கு எல்லோரும் உடன்பட்டால் செக்குண்டார் வகுப்பிற்கு தரம்பிரித்தல் / நியமித்தல் உறுதியாகும். இது கடிதமூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். |
| 4 | பங்குனி / சித்திரை | இதற்கு உடன்படாவிடில் பெற்றோர்களுக்கு வகுப்பாசிரியருடனும், பாடசாலை நிர்வாகக் குழுவின் ஒரு அங்கத்தினருடனும் அதோடு செக்குண்டார் வகுப்பின் ஒரு ஆசிரியருடனும் ஒரு இரண்டாவது பேச்சுவார்த்தை இடம்பெறும்.<br><br>இதற்கு உடன்பட்டால் செக்குண்டார் வகுப்பிற்கு தரம்பிரித்தல் / நியமித்தல் உறுதியாகும். இது கடிதமூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இதற்கு உடன்படாவிடில் உறுதியான தீர்மானத்திற்காக இந்தப் பத்திரங்கள் செக்குண்டார் வகுப்பிற்குரிய பாடசாலைப் பொறுப்பாளருக்கு கொடுக்கப்படும், மேலும் அது ... |
| 5 | ...வைகாசி வரையும் / ஆனி | ... பாடசாலைப் பொறுப்பாளரின் தீர்மானத்தோடு பிரிப்பது நிச்சயிக்கப்படும். |

## கிம்நாசியம் (நடுநிலைப் பாடசாலை)

**மிக நல்ல பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற மாணவிகளும், மாணவர்களும் 6ம் வகுப்பிற்குப் பின் ஒரு கிம்நாசியம், ஒரு நடுநிலைப் பாடசாலைக்குப் போகலாம். பங்குனி மாதம் 15ம் திகதிக்கு முன் பெற்றோர்கள் அவர்களினுடைய பிள்ளைக்கு ஒரு கிம்நாசியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். பிள்ளை கண்டிப்பாக பிரவேச அனுமதிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். ஆரம்பப் பாடசாலையில் முதல் பெற்ற மதிப்பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும். ஆரம்பப் பாடசாலையின் 6ம் வகுப்பு மாணவர்களுக்கு டொச்சிலும் கணக்கிலும் முதல் பெற்ற சராசரி மதிப்பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்.**

**பிரவேச அனுமதிப் பரீட்சைக்கு திறமைமிக்க மாணவிகளும் மாணவர்களும் சூரிச்சிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் ஆறு வகுப்புக்களுக்கும் போனதிலிருந்து பரீட்சைக் காலம் வரையும் பெற்ற அறிவும் திறமையும் எதிர்பார்க்கப்படும்.**

## எங்கே விவரமான தகவல்களைக் காணலாம்?

**ஆரம்பப் பாடசாலையில் செக்குண்டார் வகுப்பிற்கு மாற்றம்**
**ஆரம்பப் பாடசாலை அலுவலகத்தின் இன்ரநெற் பக்கத்தில் (வெப்சைற்) பொருத்தமான தகவல்களைக் காணலாம்.**
**கீழ் வருமாறு:**
*** www.volksschulamt.zh.ch**
→ Eltern **(பெற்றோர்கள்)** →Die Zürcher Volksschule **(சூரிச்சிலுள்ள ஆரம்பப்பாடசாலை)**

<<**அவர்களுடைய**>> **நகரத்திலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் சபையின் தகவல்கள் பெற்றோருக்கு மிகவும் முக்கியமானவையாகும். அதோடு நகரத்திலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் சபை அவர்களினுடைய இன்ரனெற் பக்கத்தை வைத்திருக்கிறார்கள். ஒரு சுருக்கமான வர்ணனையை இதில் காணலாம்:**
*** www.volksschulamt.zh.ch**
→ Schulen im Kanton Zürich **(சூரிச் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள்)**
→ Volksschulen **(ஆரம்பப் பாடசாலை)**

**எப்பொழுதும் நம்பகமான முதலாவதாகத் தொடர்பு கொள்ளக்கூடிய ஆள் பிள்ளையின் ஆசிரியர்.**

**கிம்நாசியத்திற்கு மாற்றம்**
**சூரிச் மாவட்டத்திலுள்ள கல்வி நிர்வாகசபையின் இன்ரனெற் வெப்சைற்றிலே பெற்றோர்கள் எல்லா முக்கியமான தகவல்களையும் காணலாம்:**
*** www.bildungsdirektion.zh.ch**
→ Schulstufen → Mittelschulen.

**இங்கே விண்ணப்பம் செய்வதற்குத் தேவையான முக்கியமான தகவல்களையும் அதோடு கன்ரோனிலுள்ள எல்லா கிம்நாசியங்களையும் மற்ற நடுநலைப் பாடசாலைகளைப் பற்றியும் இன்ரனெற் பக்கத்தில் காணலாம்.**